அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.24/93(111)

எனது இல. 111/40எல்/100றி/8(தற்)
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்,பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.7
1996.—08.07

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

சலுகை நியதிகளின்படி வாகனங்கள் இறக்குமதி செய்தலும் பொருள் கொள்வனவு மதியுரைச் சேவை கூறிலிருந்து,உபயோகித்த வாகனங்கள் வழங்கப்படுதலும்,உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வாகனங்களை உடைமை மாற்றம் செய்தலும்.

---

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 1993.10.01 ஆந் தேதிய 24/93 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை பாராளுமன்ற/ மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்காக பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

<u>பாகம் 1</u>

சலுகை நியதிகளின்படி புதிய வாகனங்களை இறக்குமதி செய்தலும் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் உபயோகித்த வாகனங்களை இறக்குமதி செய்தலும்.

(அ) <u>நியதிகளும் நிபந்தனைகளும்</u>

(1) வகுதி - பஜேரோ,இன்றர்கூலர்,மர்சீடிஸ் பென்ஸ் மற்றும் பி.எம்.டப்.போன்ற ஆடம்பர வாகனங்கள் தவிர்ந்த மற்றைய மோட்டார் வாகனம்.

(11) பெறுமானம் - சீ.ஐ.எவ்.பெறுமானம்(அமெரிக்க)டொலர் 26,500க்கு மேற்படாத வாகனங்கள்(அதற்குச் சமமான பெறுமானமுடையதாக பாவனையிலுள்ள எந்த வகையிலான பணத்தைக் கொண்டும் கணிக்க முடியும்.)

(111) உருளைக் கொள்திறன் - வரையறைகள் இல்லை.

(1V) தகைமைகள் - கடந்த 05 வருட கால கட்டத்தில் எந்த வகையான சலுகை நியதிகளின்படியும் வாகனமொன்றை இறக்குமதி செய்யாதவர்கள் அல்லது கொள்வனவு செய்யாதவர்களுமான தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள்.

(V) தீர்வை கட்டணங்களும் வரிகளும் - தீர்வை கட்டணங்களும் வரிகளுமின்றி.

பெறுமானத் தேய்வு முறையின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்தல்.

(ஆ) நியதிகளும் நிபந்தனைகளும் -

| | | |
|---|---|---|
| i. வகுதி | - | பஜரோ இன்ரர்கூலர், மர்சிடிஸ் பென்ஸ் மற்றும் பி.எம்.டப். போன்ற ஆடம்பர வாகனங்கள் தவிர்ந்த மற்றைய மோட்டார் வாகனம். |
| ii. பெறுமானம் | - | சீ.ஐ.எவ். பெறுமானம் (அமெரிக்க) டொலர் 26,500க்கு மேற்படாத வாகனங்கள் (அதற்குச் சமமான பெறுமானமுடையதாக பாவனையிலுள்ள எந்த வகையிலான பணத்தைக் கொண்டும் கணிக்க முடியும்.) |
| iii. உருளைக்கொள்திறன் | - | வரையறைகள் இல்லை. |
| iv. தகைமைகள் | - | பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகவோ அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராகவோ அல்லது வேறு எந்தத் தரத்தைக் கொண்டிருப்பவராகவோ பொருள் கொள்வனவு மதியுரைச் சேவை கூறிலிருந்து பெறுமானத் தேய்வு முறையின் கீழ் எந்தச் சந்தர்ப்பத்திலும் மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்யாத தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள். |
| v. தீர்வைக் கட்டணமும் வரிகளும் | - | விசேட சுங்கக் கட்டணம் மற்றும் உற்பத்தி வரியாக ரூபா.2500/- அறவிட வேண்டும். |

03. மாகாண சபை உறுப்பினர்கள் தம் செலவில் வாகனங்களை இறக்குமதி செய்தல்.

| | | |
|---|---|---|
| i. வகுதி | - | பஜரோ, இன்ரர்கூலர், மர்சிடிஸ் பென்ஸ் மற்றும் பி.எம்.டப். போன்ற ஆடம்பர வாகனங்கள் தவிர்ந்த மற்றைய மோட்டார் வாகனங்கள். |
| ii. பெறுமானம் | - | சீ.ஐ.எவ். பெறுமானம் (அமெரிக்க) டொலர் 26,500க்கு மேற்படாத வாகனங்கள் (அதற்குச் சமமான பெறுமானமுடையதாக பாவனையிலுள்ள எந்த வகையிலான பணத்தொகையைக் கொண்டும் கணிக்க முடியும்) |
| iii. உருளைக்கொள்திறன் | - | சீ.சீ.2000 மேற்படாத பெற்றோல் வாகனங்கள் மற்றும் சீ.சீ.3000 மேற்படாத டீசல் வாகனங்கள். |
| iv. தகைமைகள் | - | கடந்த 05 வருட காலக்கட்டத்தில் எந்த வகையான சலுகை நியதிகளின்படியும் வாகனமொன்றை இறக்குமதி செய்யாதவர்கள் அல்லது கொள்வனவு செய்யாதவர்களுமான தற்போதைய மாகாணசபை உறுப்பினர்கள். |
| v. தீர்வைக் கட்டணங்களும் வரிகளும். | - | தீர்வை கட்டணங்களும் வரிகளும் இன்றி. |

04. மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் 1995 ஜூன் மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் செயற்படுமென்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக் 1995.06.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக நாணயக் கடிதங்கள் திறந் திருந்தால் வாகன வகுதி, என்ஜின் கொள்ளளவு பெறுமானம், தீர்வைக் கட்டணங்கள், வரிகள் மற்றும் தகைமைகள் ஆகியவை தொடர்பில் அந்தக் கால கட்டத்தில் நடை முறையிலிருந்த 24/93 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் சம்பந் தப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களில் காட்டப்பட்டிருந்த நிபந்தனைகள் அதேபோல் வலுப்படும் 10வது பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்ட 9 பதாம் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் வாகனங்கள் இறக்குமதி செய்வது தொடர்பாக சீ.ஐ.எவ். பெறுமானத்தில் 25% வீதம் செலுத்துவதை கைவிடுவது 1995.05.04 ஆந் திகதி தொடக்கம் ஏற்புடையனவாகும். மாகாண சபை உறுப்பினர்கள் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பிலும் இது போன்ற விலக்களிப்பு ஏற்புடையனவாகும். எவ்வாறாயினும் தற்போது சீ.ஐ.எவ். பெறுமானத்தில் 25% சத வீதம் செலுத்தப் பட்டிருந்தால் அந்தத் தொகை மீளக் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

05. வாகனங்கள் தொடர்பிலான ஏனைய நிபந்தனைகள் 24/93 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

06. வாகனத்திற்காக கையொப்பமிட வேண்டிய உடன்படிக்கை திருத்தப் பட்டிருப்பதுடன் அது பின்னிணைப்பு (அ)வாக இணைக்கப்பட்டுள்ளது. கையொப்பமிட வேண்டிய ஈட்டு முறி 24/93 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி ஆகும்.

07. தீர்வை வரிகளிலிருந்து விலக்களிப்பதை சிபாரிசு செய்வது பற்றிய படிவம் திருத்தப்பட்டிருப்பதுடன் அது பின்னிணைப்பு (ஆ)வாக இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்: (ஆர். எஸ். ஜயரட்ன)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.

பின்னிணைப்பு (அ)

மோட்டார் வாகனம் ஒன்றின் மீது தீர்வைச் சலுகை வழங்குவதற்கான உடன்படிக்கை - கௌரவப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்காக.

---

(இதனகத்துப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் எனக் குறிப்பீடு செய்யப்படும்.......................................எனும் முகவரியைச் சேர்ந்த........................................
(முழுப் பெயர்)
என்பவரை ஒரு தரப்பினராகவும்;

இதனகத்துப் பின்னர் "செயலாளர்" என அழைக்கப்படுபவரும் குறிப்பீடு செய்யப்படுபவருமான பாராளுமன்றப் பொதுச் செயலாளர்/..............
மாகாண சபையின் தலைமைச் செயலாளராக செயலாற்றுகின்ற..........
.............................................,என்பவரும்
(முழுப்பெயர்)
அப்போதைக்கு அப்பதவியில் செயலாற்றுகின்ற பதிலாட்கள், வழியுரிமையாளர் பின்னுரிமையாளர்கள் உரிமைத் தத்துவகாரர்கள் உள்ளடங்குவதுடன் (இதனகத்துப் பின்னர் அரசாங்கம் என அழைக்கப்படுவதும் குறிப்பீடு செய்யப்படுவதுமான ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்காகவும், அரசு சார்பிலும் செயலாற்றுகின்ற பாராளுமன்ற பொதுச் செயலாளர்/........................
மாகாண சபையின் தலைமைச் செயலாளர் ஆகிய (இதனகத்துப் பின் "செயலாளர்" என அழைக்கப்படும்.........................................
(முழுப்பெயர்)
என்பவர் மறுதரப்பினராகவும் கொண்டு கையொப்பமிடும் உடன்படிக்கையாகும்.

(அ) பாராளுமன்ற/மாகாண சபை உறுப்பினர் தற்போது பாராளுமன்றத்தில்/ ............................மாகாண சபையின் உறுப்பினராக செயலாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாராதலாலும்,

(ஆ) இதனகத்துள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டதான வாகனத்தை, இறக்குமதி செய்ததன் மீதான தீர்வைக் கட்டணங்கள் மற்றும் வரிகளை தளர்த்தீடு செய்யும் சலுகை வழங்குவதற்கு அரசு உடன்பட்டிருப்பதாலும்,

(இ) மேற்படி சலுகையுடன் இறக்குமதி செய்யப்பட்ட (இதனகத்தில் பின்னர் சொல்லப்பட்ட வாகனம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) மோட்டார் வாகனத்தை உடன்படிக்கை நியதி நிபந்தனையின்படி பயன்படுத்துவதற்கு மேற்படி இரு தரப்பினர்களாகிய பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் உடன்பட்டிருப்பதாலும்,

இப்போது இவ்வுடன்படிக்கையில் காணப்பட்டுள்ளதாவது, இத்தால் பின்வருமாறு பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் மற்றும் செயலாளர் பரஸ்பரம் உடன்பட்டுக் கொள்கின்றனர்:

(1) சொல்லப்பட்ட வாகனம் தொடர்பில் செலுத்தத்தக்க மொத்தச் சுங்கத் தீர்வைகள், வரிகள் போன்றவை.................................
.........................ரூபா(...............ரூபா)வாகும்.

(11) சொல்லப்பட்ட வாகனம் பாராளுமன்ற உறுப்பினரால்(மாகாண சபை உறுப்பினரால் இறக்குமதி செய்யப்படுகிறது.)

(111) சொல்லப்பட்ட வாகனத்தை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பிக்கும் பாராளும உறுப்பினரால்/மாகாண சபை உறுப்பினரால் செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வைக வரி போன்றவற்றிற்குச் சமமாக அமையும்.......................
.........ரூபா(...............ரூபா) தொகைக்கான சலுகை அரசு வழங்க வேண்டும்.

(IV) பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் குறித்த வாகனத்தை கவனமாக உபயோகிப்பதோடு அதனை முறைப்படி பழுது பார்த்துச் சிறந்த தொழிற்பாட்டு நிலைமையிற் பேணுதல் வேண்டும்.

(V) பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் சொல்லப்பட்ட மோட்டார் வாகனத்தினதும் அதன் ஒவ்வொரு பாகங்களினதும் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பதோடு அதன் பரிபூரண பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஏற்படுத்த வேண்டும்.

(VI) பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் திறைசேரிச் செயலாளரது முற்பட்ட அங்கீகாரம் இல்லாமல் எந்தச் சூழ்நிலையிலாவது எவரேனும் ஆளுக்கு குறித்த வாகனத்தை கடன் கொடுக்கவோ, வாடகைக்கு விடவோ, குத்தகைக்கு விடவோ, விற்கவோ, அடகு வைக்கவோ, கையளிக்கவோ, பரிமாற்றஞ் செய்யவோ வேறு வழியில் அகற்றிவிடவோ அதன் உடைமையைக் கைத்துறக்கவோ கூடாது. இந்த நிபந்தனையை எந்த விதத்திலாவது மீறினால் வாகனம் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரசினால் பறிமுதல் செய்யப்படும்.

(VII) சொல்லப்பட்ட வாகனம் ஏதாவது விபத்துக்கு உள்ளாகும் அல்லது விபத்தில் சம்பந்தப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது சேதப்படும் அல்லது இழக்கப்படும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் அதனை பொருத்தமான பொலிசு நிலையத்துக்கும் தொடர்புள்ள செயலாளருக்கும் உடனே அறிவித்தல் வேண்டும்.

(VIII) பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் வாகனத்தின் உடைமையை அதை இறக்குமதி செய்த திகதியிலிருந்து ஐந்து வருட காலப் பகுதியினுள் நிதி அமைச்சின் செயலாளரது முற்பட்ட அங்கீகாரத்தினைப் பெறாமல் எவரேனும் ஒரு ஆளுக்கு மாற்றக் கூடாது. அவ்வாறு மாற்றும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர் தனக்கு சலுகையாக வழங்கப்பட்ட தீர்வை, வரிகள் போன்றவை பொருட்டு அரசாங்கத்துக்கு.......................ரூபாவை(.................ரூபா) செலுத்த வேண்டும். இந்த நிபந்தனை மீறப்பட்டால் வாகனம் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும்.

(IX) இதில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் முறைப்படி பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாகக் கூடிய பணத்தொகைகள் யாவும் முறைப்படி செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் இந்த வாகனத்தை அதனைச் சுங்கத் திணைக்களத்திலிருந்து எடுத்த திகதியிலிருந்து முப்பது (30) நாள்களுள் அதை இறக்குமதி செய்த நேரத்தில் அது தொடர்பாகத் தளர்த்திடு செய்யப்பட்ட தீர்வை, வரிகள் என்பவற்றின் பெறுமதியாக................ரூபா(.............ரூபா) கொண்ட தொகைக்கு அரசாங்கத்துக்கு ஐந்து வருட காலப்பகுதிக்கு ஈடுகொடுக்க வேண்டும்.

(X) பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் வாகனத்துக்கு தீர்வை, வரிச் சலுகையாக வழங்குவதற்குக் குறையாத ஒரு தொகைக்கு முழுமையான அகல் விரிவான காப்புறுதிக் கவசத்தை மேற்குறித்த ஐந்து வருடக் காலப் பகுதிக்கு பெற்றுக் கொள்ள வேண்டும்.

(XI) வாகனத்தை இறக்குமதி செய்த திகதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதி ஒன்று கழிவதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினால் அல்லது தனது பதவியை வெறிதாக்கினால் அல்லது தனது பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அதனை இறக்குமதி செய்த நேரத்தில் அது தொடர்பில் தளர்த்திடு செய்யப்பட்ட தீர்வை, வரி போன்றவற்றை அவர் விகிதசம அடிப்படையில் செயலாளருக்குச் செலுத்துவார்.

(XII) பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் வாகனம் வைத்திருக்கப்படும் முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் அதனை அத்தகைய மாற்றம் நிகழ்ந்த திகதியிலிருந்து ஒரு வார காலத்தினுள் மோட்டார் வாகனப் பதிவாளர், திறைசே. செயலாளர், சுங்கப் பணிப்பாளர் அதிபதி ஆகியோருக்கும் தொடர்புள்ள செயலாளருக்கும் அறிவிப்பார்.

இ சம்பந்தப்பட்ட மாகாண சபையின் தலைமைச் செயலாளர்

பின்னிணைப்பு - (ஆ)

திறைசேரி செயலாளர்,
பொதுத் திறைசேரி,
கொழும்பு. 01

24/93(111) .... இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 1995.07.09ஆந் தேதிய அமைச்சரவைத் தீர்மானங்கள் கௌரவப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுக்காக சலுகை நியதிகளின்படி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை தீர்வை வரிகளிலிருந்து விலக்களிப்பதற்கான விதப்புரை.

---

.................................... இல் ....................................
(அலுவலக முகவரி)
.................................................. ஆகக் கடமையாற்றும்
(பதவிப் பெயர்)
திரு/திருமதி/செல்வி .................................................. என்பவர்
(பெயர்)
அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல ........................ இன்படி சலுகை நியதிகளின் பேரில் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்வதற்கு உரித்துடையவர் ஆவார்.

அவர் இறக்குமதி செய்த .................................................. வாகனம்
(வாகன விபரம்)
தொடர்பில் ஏற்புடைய தீர்வைத் தளர்தீடு வழங்கப்பட வேண்டுமென நான் விதந்துரைக்கின்றேன்.

இந்த வாகனம் தொடர்பில் ........................................ ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைய வேண்டிய தொடர் நடவடிக்கைகள் அனைத்தும் என்னால் அல்லது எனது சார்பில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் எடுக்கப்படும் என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.

வேண்டிய நடவடிக்கை பொருட்டு பின்வரும் ஆவணங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன:

(1) மேற்குறித்த வாகனத்தை இறக்குமதி செய்யும் ஆள் உமக்கு முகவரியிட்டுத் தீர்வை விலக்குக் கோரி அனுப்பும் கடிதம்.

(11) மேற்குறித்த வாகனம் தொடர்பில் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் வழங்கிய இறக்குமதி உத்தரவுப் பத்திரத்தின் பிரதி.

(111) கிடைக்கத்தக்கதாக இருந்தால் மேற்குறித்த வாகனத்தின் பொருட்பட்டியல் பிரதி.

கையொப்பம் ---------------------

பெயர் :-

பதவிப் பெயர் :-

24/93(111)

## மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணை

(மோட்டார் வாகனத்தின் விபரம்)

மோட்டார் வாகனம்:....................

அ. ஆக்கமும் வகையும்

ஆ. உடற்கோப்பு

இ. இயந்திர இல.

ஈ. அடிக்கட்டை இல.

உ. பதவி இலக்கம்

ஊ. சேர்க்கப்பட்ட மேலதிக பகுதிகள்.

எ. உபகரணங்களும் துணைக் கருவிகளும்.

இதற்கு சாட்சியாக பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பில் பாராளுமன்றப் பொதுச் செயலாளர்/.....................மாகாண சபையின் தலைமைச் செயலாளரால் இதற்கும் இது போன்ற இரண்டு ஆவணங்களும் ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றி.............ஆண்டு.............மாதம்.........ஆந் திகதி கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

.............................
பாராளுமன்ற உறுப்பினர்/மாகாண சபை உறுப்பினர்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பில்

.............................
பாராளுமன்றப் பொதுச் செயலாளர்/சம்பந்தப்பட்ட மாகாண சபை தலைமைச் செயலாளர்.

சாட்சிகள்

1. கையொப்பம்...............
பெயர்...............
பதவி...............
முகவரி...............
திகதி...............

2. கையொப்பம்...............
பெயர்...............
பதவி...............
முகவரி...............
திகதி...............